புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 14. TML1153 - ஆர்.சூடாமணி சிறுகதையில் பெண்கள்

ப.சுகன்யாதேவி
உதவிப்பேராசியர்
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), வேளாளர் மகளிர் கல்லூரி,
திண்டல், ஈரோடு–12.

## முன்னுரை

பெண்ணுரிமை பற்றி முண்டாசுக் கவிஞன் பேச ஆரம்பித்தான். பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று, ஆனால் உடனடியாக இந்த தைரியம் பெண்களுக்கு வந்ததா என்றால் அப்படி இல்லை. ஒரு இந்திரா காந்தி, ஒரு சரோஜினி நாயுடு ஒரு சட்டங்கள் இயற்றும் நிலைக்கு வந்துவிட்டதாலேயே பெண்கள் முழுவிடுதலை அடைந்துவிட்டனர் என்று இந்த தேசம் முழுக்கவே ஒரு உற்சாகம் கொப்பளிக்க மேடை தோறும் முழக்கம் கேட்டது. ஆனால் உண்மையில் பெண்களுக்கான சுதந்திரம் என்பது முதலில் அவளும் ஆணுக்கு சரியாக சக உயிராக மதிக்கப்பட வேண்டும். ஆண்கள் போன்று இந்த சமுதாயத்தில் மரியாதையுடன் நடத்தப்படுவதும், அவளுடைய உணர்வுகளும் மதிக்கப்படுவதுமாகும்.

## ஆணுக்கு சரி நிகர் சமம் பெண்

குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவளும் ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாக மதிக்கப்பட வேண்டும் என்பது தான் உண்மையான பெண் சுதந்திரம். ஆங்காங்கே பெண் சுதந்திரக்குரல்கள் எழுந்து வந்தாலும், அது சரியான விஷயமாக வெளிவரவில்லை. அது ஏதோ பெண்கள் அவர்களுடைய வெளித்தோற்றத்திற்கான சுதந்திரம் என்றோ பழக்க வழக்கங்களில் ஆணுக்கு சரியாக தாங்களும் இருக்க வேண்டும் எனப் பெண்கள் விழைகிறார்கள என்பதாகவுமே புரிந்து கொள்ளப்பட்டது.

பெண் சுதந்திரம், கருத்தால் உணர்வுகளால், அறிவால், மனதால், கண்ணியமாக நடத்துவதால், மரியாதையாக நடத்தவதால் என இவற்றின் மூலம் தான் வெளிப்பட வேண்டியது. ஆனால் இந்தப் புரிதல் இன்றளவும் கூட இந்தச் சமுதாயத்தில் இல்லை என்றே சொல்லலாம்.

பெண்கள் என்பவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே பார்க்கும் பார்வை என்பதே நிலவி வருகிறது. மகளிர் இயக்கங்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்து கொண்டிருக்கும். இந்தக் காலக்கட்டத்தில் கூட பெண்களுக்கெதிரான வன்முறையை எல்லாம் முழுவதுமாக இந்தச் சமுதாயத்தில் ஒழித்துவிட முடியவில்லை.

மனித மனங்களின் சிந்தனை மாறாத வரைக்கும் இவற்றை முற்றிலுமாக ஒழித்துவிட முடிவது எளிதானதுமல்ல. இன்றளவும் ஆணாதிக்கச் சிந்தனைதான் பெண்களுக்கெதிரான பாகுபாட்டிற்கான காரணம். ஆணாதிக்கச் சிந்தனைகள் என்பதைப் பலரும் அது ஆண்கள் மத்தியில் நிலவுவது என்று நினைத்துக் கொண்டு, ஆண்களை எதிரிகளாகப் பார்க்கும் பார்வை இருக்கிறது.

ஆனால் அது அப்படியல்ல பெண்களை அடிமையாக நினைக்கும் அவர்களுக்கெதிராக செயல்படும் எவருமே (அது ஆணோ, அது பெண்னோ) அப்படிப்பட்டவர்கள்தான. இந்த ஆணாதிக்கச் சிந்தனை மாற வேண்டும் என்பது தான். உண்மையான பெண் சுதந்திரம் வேண்டுபவர்கள் முன் வைப்பது இதனை அடிப்படையாகக் கொண்டது தான்.

## வரதட்சனை

ஆணும் பெண்ணும் அன்புகொண்டு இயற்கையான பண்புகளோடு ஒருவருக்கொருவர் இணங்கி வாழ்வதற்கான ஒரு ஒப்பந்தம் திருமணம். இக்குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்துத் தோழமை உணர்வுடன் வாழவேண்டும். இருவரும் தனித்துவம் உடையவர்கள் என்பதை

இருவரும் ஒப்புக் கொண்டு ஒருவரையொருவர் பிரிந்துகொள்ள வேண்டும். பெண்ணுக்கு திருமணம் இன்றியமையாத்து போலவே, ஆணுக்கு திருமணம் இன்றியமையாததாகும். ஆனால் ஒரு பெண் என்பவளர் ஆணைச் சார்ந்து தான் வாழ வேண்டும், அவனை நிறைபடுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே 'திருமணம்' செயல்படுகிறது.

கணவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இணக்கமாக நடந்து கொள்ளுதல், வீட்டு வேலைகளைக் கவனித்தல், குழந்தைகளைப் பெற்றெடுத்தல், அவர்களை வளர்த்தல் என்ற பலவிதமான கடமைகள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று குறைவுபட்டாலும் அவள் உடனடியாக விலக்கப்படுகிறாள்.

ஒரு பெண்ணின் தனித்தகுதிகள் மட்டும் அவளுடைய திருமணத்தை நிர்ணயிப்பதில்லை. சோதிட சாதகப் பொருத்தங்களும், மாப்பிள்ளை வீட்டாரின் எதிர்பார்ப்புகளும், குடும்பத்தின் தகுதியும், குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகளும் சேர்ந்தே நிர்ணயிக்கின்றன. 'திருமணம்' என்பது ஆணை பொறுத்தமட்டில் அவனுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான ஒரு துணை தேடலாக எண்ணுகிறான்.

ஆர் சூடாமணி சிறுகதையில் வரும் அர்த்தங்கள் ஆயிரம் கதையில் வரதட்சிணைக் கொடுமையால் அவதியுறும் சவிதாவைக் காட்டுகிறார்.

**முடிவுரை**

இந்தியாவிலேயே ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் ஒரே பெண்மனி கே.சி.ரேகா.

இந்த சமவுரிமையும், இந்த சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டான பங்கும் எதன் அடிப்படையில் கோரப்படுகிறது என்பதை அனைவரும் புரிந்து கொண்டனரா என்பது தான் கேள்விக்குறியாக உள்ளது. சம உரிமையை நிராகரிப்பதாலும், தவறாக புரிந்து கொள்வதாலும் சமுதாயத்தில் பல பிரச்சனைகள் தலைதூக்குகின்றன. இன்றைய சூழலில் சமவிமை என்ன என்பதை அனைவரும் புரிந்து கொண்டு செயல்பட்டால் நாடு முன்னேறும்.

உலகில் ஆண்–பெண் சமநிலையில் முன் எப்போதையும் விட இப்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக புதிய அறிக்கை ஒன்று கூறுகிறது. கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் எங்கண்டியூர் எனும் கடற்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் கே.சி.ரேகா. நான்கு பெண் குழந்தைகளின் தாயான இவர் இந்தியாவிலேயே ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் ஒரே பெண்மணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளாக கணவருடன் கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகிறார். ஆழ்கடலுக்குச் சென்றால் சில சமயம் நாலைந்து நாட்கள் கழித்து தான் கரைக்கு திரும்புகிறார்.